DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.1/2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-10 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.மோகன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent. u/s 355 BNSS petition filed and allowed.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 05.03.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி 30.06.2022 வருடம் பணி ஓய்வு பெற்றேன். கடந்த 2018 வருடம் திருவாடானை காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்தபோது தொண்டி காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது 18.07.2018 தேதி சார்பு ஆய்வாளர் திரு. மாரிசாமி என்பவரால் பதிவுசெய்யப்பட்ட குற்ற எண்.104/18. u/s 379 IPC யின் முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கினை 14.05.2019 தேதி

எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று பார்வையிட்டதில் முந்தைய விசாரணை அதிகாரி தயார் செய்த மாதிரி வரைபடமும், ஒரே மாதிரி இருந்ததால் நான் தனியாக மாதிரி வரைபடம், பார்வைமகசர் தயார் செய்யவில்லை. ஆய்வாளர் மாரிஸ்வரி தயார்செய்த பார்வைமகசர் அ.சா.ஆ.9 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேலும், சாட்சிகளை விசாரணை செய்ததில் அவர்களும் முந்தைய விசாரணை அதிகாரியிடம் கூறியதையே என்னிடம் கூறியதால் நான் தனியாக வாக்கு மூலம் பதிவுசெய்யவில்லை. இவ்வழக்கின் சம்பவயிடத்தை பார்வையிட்டதிலிருந்தும் சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்தும் வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரியை தேடி சென்றதில் தொண்டி காவல் நிலைய குற்ற எண்.74/19, பிரிவு 392 இதச வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி பசிர்அலி என்பவரை தேடி சென்றதில் 13.05.2019 தேதி 19.00 மணிக்கு வேளாங்குடி சவுக்கு தோப்பு அருகே நின்று கொண்டிருந்த எதிரியை எனது ரகசிய தகவலாலி அடையாளம் காட்ட காரணம் கூறி 19.15 மணிக்கு கைதுசெய்தேன்.

2. பின்பு கைதுசெய்யப்பட்ட இடத்தில் வைத்தே எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முத்து, தங்கவேலு ஆகியோர் முன்னிலையில் பதிவுசெய்தேன். மேற்படி அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அதே இடத்தில் வைத்தே 21.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து இருசக்கர வாகனமான TN 55 BB 6723 பதிவெண் கொண்ட Royal Enfiled வாகனத்தை அத்தாட்சியில் கைப்பற்றினேன்.

3. அதன்பிறகு எதிரி கெடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி மற்றும் அதே சாட்சிகள் அழைத்து கொண்டு எதிரி கூறிய அறந்தாங்கிக்கு சென்று எதிரி அடையாளம் காட்டிய அவரது வீட்டிற்கு சென்று 14.05.2019 தேதி காலை 6.30 மணிக்கு எதிரியின் வீட்டின் பின்புறம் உள்ள காலி இடத்தில் புதைத்து வைத்திருந்த குற்ற எண்.104/18 வழக்கில் சம்மந்தப்பட்ட திருடுபோன சொத்துகளான 3 லட்சம் பணமும்(2000 ரூபாய் நோட்டுகள் 150 எண்ணம்), 32 கிராம் தங்க கட்டி மற்றும் ஒருசொத்து பத்திரம் ஆகியவற்றை எதிரி எடுத்து ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் 07.15 மணியளவில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். எதிரி கொடுத்த

ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட **பகுதி அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அத்தாட்சி அ.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரியிடமிருந்து கைபற்றிய 150 எண்ணம் 2000 ரூபாய் நோட்டுகள் தற்போது என்னிடம் புகைப்படம் வாயிலாக காண்பிக்கப்பட்டு சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியிடமிருந்து கைப்பற்றிய 32 கிராம் தங்க கட்டி தற்போது என்னிடம் புகைப்படம் வாயிலாக காண்பிக்கப்பட்டு சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது

4. பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துகள் சகிதம் தொண்டி காவல் நிலையம் வந்து 14.05.2019 தேதி 09.30 மணிக்கு எதிரியை பாராவசம் ஒப்படைத்தேன். பின்பு இவ்வழக்கு கோப்புகளை பார்வையிட்டதிலிருநது மேற்படி எதிரியின் ஒப்புதல் வாக்மூலத்தின் அடிப்படையிலும் எதிரி பசிர் அலி இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ளது உர்ஜிதமானதால் வழக்கு எண். 104/18 பிரிவு 379 இதச கீழ் காரணம் கூறி கைதுசெய்தேன். பின்பு தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் சொத்துகளை படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு 17.05.2019 தேதி இவ்வழக்கில் மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இதோடு தொடர்புடைய இன்னொரு எதிரி தொண்டியை சேர்ந்த முத்து மகன் அருண்குமார் என்பவரை தேடிசென்றதில் 17.05.2019 தேதி தொண்டி மீன் மார்க்கெட் அருகே வைத்து சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவத்தை தாமாக முன் வந்து ஏற்றுகொண்டதின்பேரில் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முத்து, தங்கவேல் ஆகியோர் முன்னிலையில் பதிவுசெய்தேன். எதிரி அருண்குமார் தான்கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மேலும் சில குற்ற வழக்குகளில் ஈடுபட்டதையும் அந்த வழக்குசொத்துகளையும் எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று சொன்னததை அடுத்து எதிரி அருண்குமாரையும் அதே சாட்சிகளையும் அழைத்து சென்று எதிரி அடையாளம் காட்டி தனது வீட்டிற்கு பக்கத்தில் தனியாக புதைத்து வைத்திருந்த சொத்துகளை எடுத்து ஆஜர் செய்ததை அந்த அந்த குற்ற வழக்குகளில் அத்தாட்சி யில் கைப்பற்றினேன்.

5.பின்பு எதிரி மற்றும் வ ழக்கு சொத்துகள் சகிதம் நிலையம் வந்து 17.05.2019 தேதி தக்க திரேக பரிசோதனைசெய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின் வழக்கு சொத்துகளை படிவம் 91 மூலம் சம்மந்தப்பட்ட வழக்குகளுக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன்பிறகு சாட்சிகள், முத்து தஙகவேலு ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்பு வழக்கு கோப்பினை ஆய்வாளர் திரு.சரவணன் மேற்பார்வைக்கு வைத்தேன். இவ்வழக்கின் கோப்பை பார்வையிட்டதில் ஆய்வாளர் திரு.சரவணன் அவர்கள் எதிரிகள் மீது இத ச பிரிவுகள் 379 கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும். இவ்வழக்கு கோப்பில் இருக்கும் அவருடைய கையெழுத்து மற்றும் எழுத்துகள் எனக்கு நன்கு தெரியும்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1.புகார்தாரரிடமிருந்து இவ்வழககில் எழுத்து பூர்வ புகார் மனு வாங்கப்படவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரிடமிருந்து எழுதாத வெள்ளைதாளில் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து இவ்வழக்குசொத்துகள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. கண்ணுற்ற சாட்சிகள் மாணிக்கம் மற்றும் மரியரத்தினம் வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான முத்து., தங்கவேல் முன்னிலையில் வழக்கு சொத்துகள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி முத்து, தங்கவேல் முன்னிலையில் 1ம்எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்யப்படவில்லை என்றும் வெற்றுதாளில் சாட்சிகளிடமிருந்து கையொப்பம் பெற்று தயார்செய்தோம் என்றால் சரியல்ல.

2. 1ம் எதிரி பசில்அலியின் வீட்டிற்கு சென்று சாட்சிகள் முன்னிலையில் சொத்துகள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி பசிர் அலி வீட்டிற்கு கைப்பற்றுதல் மகசர்சாட்சிகள் முத்து, தங்கவேல் ஆகியோர்களை அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயின் மற்றும் வளையலை வழக்கில் கைப்பற்றவில்லை என்றும் தங்க கட்டியாக தான் கைப்பற்றியதாக வழக்கில் குறிப்பிட்டுள்ளோம் என்றும் மேற்படி நகைகளை எதிரிகள் எப்படி யார்மூலம் எங்கு வைத்து தங்க கட்டியாக உருக்கி உருமாற்றம் செய்தார்கள்

என்று வழக்கில் தெரிவிக்கவில்லை என்றால் தங்க கட்டியகாக தான் வழக்கு சொத்துதகள் கைப்பற்றப்பட்டது எதிரி பசிர்அலியின் ஒப்புதல வாக்குமூலத்தில் திருடிய நகைகளை தங்க கட்டியாக உருமாற்றியது குறித்து தெரிவித்துள்ளார். நாங்கள் மேற்படி அவருக்கு உருமாற்றம்செய்ய உதவிய நபரை விசாரித்தோம். அவர் சாட்சியம் அளிகக முன்வராததால் இவ்வழக்கில் அவரை சாட்சியாக சேர்க்கவில்லை.

3. எந்த இடத்தில் யார் நகைகளை உருமாற்றினார் என்று இவ்வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி நகைகளை உருமாற்றம்செய்த நபர் வழக்கில் குற்ற உடந்தையர் என்ற அடிப்படையில் அவரும் வழக்கின் எதிரி என்றால் சரியல்ல. மேற்படி உருக்கிய நபர்கள் தான் எங்களுக்கு ரகசிய தகவல் கொடுத்தார்கள் அதனால் வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை. திருட்டு நகைகளை உருக்கும் நபர் குற்றம் சாட்டப்படவேண்டிய நபர்என்றால் சரிதான். ஆனால் இவ்வழக்கில் நகைகளை உருக்கிய நபர்களுக்கு அது திருட்டு நகை என்று தெரியாது. நகைகளை உருக்கிய நபருக்கு நகையின் உரிமையாளர் தான் நகைகளை கொண்டு வந்துள்ளார் என்று தெரிந்திருந்தால் அவர் ரகசிய தகவல் கூற வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

4. மேற்படி நகையை உருக்கிய நபர் என்று ஒரு நபர் இல்லை என்றும் நான் கற்பனையாக அவரை குறித்து சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி நபர் உண்மையாகவே திருட்டு நகைகளை உருக்கியிருந்தால் அவரையும் இவ்வழக்கில் எதிரியாக சேர்த்திருப்போம் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பான்கார்டு, ஆதார் காட்டு பேங்க் பாஸ்புக் ஆகியவற்றை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். ஆனால்எதிரி அவற்றை ஒரு இடத்தில தூக்கி எறிந்ததாக ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்தார். அந்த இடத்தில தேடி பார்த்தோம் அவை கிடைக்கவில்லை அதனால் கைப்பற்றப்படவில்லை. மேற்படி விவரத்தை குற்ற இறுதியறிக்கையில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

5. வழக்கின் எதிரிகள் வழககில் தெரிவித்துள்ளவாறு எந்த குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றும் குற்ற செயலில் ஈடபட்ட உண்மை குற்றவாளிகளை தப்பிக்கவிட்டு எதிரிகளின்பேரில் பொய்யாக புகாரினை பெற்று கொண்டு முறையாக

விசாரணை செய்யாமல் இவ்வழக்கின் எதிரிகளை சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கின் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் விசாரணை முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.